1972 மார்ச் 30]

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த வழக்கில் சாட்சியம் அளித்த தொழிலாளர்கள் மீது இப்போது அதிகாரிகள் பழி வாங்குகிறார்கள் என்கிற புகார்கள் வந்துள்ளனவே. அவற்றின்மீது என்ன நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : என்னுடைய கவனத்திற்கு எந்த விதமான புகாரும் வரவில்லை. வந்தால் கவனிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

சுதந்திரா, பிரஜா சோஷலிஸ்ட் கட்சிகளின் பெயர் மாற்றம் குறித்து.

திரு. நா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்ட மன்றத்தில் இடம் பெற்றிருக்கிற சுதந்திராக் கட்சியின் ஸ்தாபகரும் அதன் தலைவருமான திரு. ராஜாஜி அவர்கள் அந்தக் கட்சியின் பெயரை மாற்றப் போவதாக அறிவித்திருக்கிறாரே, அதுபற்றி நமது சட்டமன்றத் தலைவருக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? வந்திருந்தால் அதை அறிவிப்பார்களா என்று கேட்கிறேன்.

DR. H. V. HANDE : I am very grateful to the hon. Member for giving some publicity to the point of view expressed by my revered Leader, Rajaji. He has not mentioned anything new. We have been repeatedly saying that we are for social justice. It is not being understood properly and because of some frustration constantly whatever he says is not understood correctly. What he has said is only just what he always says in his own usual way. That has nothing to do with our Party anew.

MR. SPEAKER : 'Justice Party' என்று சொல்லலாமா ?

DR. H. V. HANDE : 'Social' must also come, for, now-a-days, only that has a market value and every party wants to call itself by that name and all the parties are calling themselves as socialist parties or something like that. Perhaps because of that he has been saying that as we are also for social justice, we should add that also. Though we do not call ourselves socialist party, we are primarily for social justice. I am very grateful to the hon. Member, Thiru Veerasamy for having brought this to the notice of the House.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, the Hon. Member Dr. Hande has expressed that for the sake of market value, they want to add the word 'socialist' to the name of his party. Would that mean that they do not really believe in Socialism, but that it is only for the purpose of market value....

DR. H. V. HANDE : I did not say 'market value'.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களுக்கு மார்க்கெட் இல்லை என்று சொன்னார்களே, உங்களுக்கு அது மாதிரி போயிருக்கிறதா?

திரு. கே. எம். சுப்பிரமணியம் : அந்த மார்க்கெட்டுக்குள் வரப் போகிறாரா என்ன?

DR. H.V. HANDE : I did not say market value. I only stated that that expression is very popular. The hon. Members might imagine that it might be due to market value. I do not think there can be any market value at all in politics. We have to be understood by the people and there is no question of market value or not............

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, இந்த மன்றத்தில் இருக்கின்ற சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் 4 பேர் அன்று பிரஜா சோஷலிஸ்ட் கட்சி என்ற பெயரில் வந்தார்கள். பின்னால் சோஷலிஸ்ட் கட்சி என்று மாற்றிக் கொண்டார்கள். போன வாரம் கோயம்புத்தூரில் கூடி அவர்கள் அந்தக் கட்சியிலிருந்து விலகி விட்டதாக அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் என்ன பெயரில் சட்ட மன்றத்தில் அழைக்கப்படுவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் யாரும் இங்கே இல்லை, நீங்கள்தான் அவர்களுக்காகப் பேச வேண்டும் என்று தோன்றுகிறது. பெயர் மாற்றம் சுதந்திரமான ஒன்று தான். டாக்டர் ஹாண்டே அவர்களும் பெயரை மாற்றிக் கொள்ளலாம். ஆனால் சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் தகவல் இருந்தால்தான் கொடுக்க முடியும். பத்திரிகையில் பார்ப்பதையோ வெளியில் சலனங்கள் ஒவ்வொரு நாளும் ஏற்படுகிறது என்பதற்கோ சட்ட மன்றம் பொறுப்பாளியல்ல. இப்போது சுதந்திரா பார்ட்டி என்றுதான் இருக்கிறது. புதிய பெயரில் வந்தால் அதைப் பரிசீலிப்போம்.

(3) அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் 193 (1)-வது விதியின் கீழ் பின் வரும் சட்டப்பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் (Business Advisory Committee) உறுப்பினர்களாக நியமிக்கிறேன்.—

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி
(மாண்புமிகு முதலமைச்சர்).

2. மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன்
(மாண்புமிகு பேரவை முன்னவர்).